**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>**

முன்னிலை : **திருமதி. D.ஜான்சிராணி, MBA., LLM.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**

**ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 17–ஆம் நாள், வியாழக்கிழமை

<u>இ.ம.எண்.10/2025 இன் அ.வ.எண். 200/2004</u>

**<u>CNR No. TNSA13-000080- 2004</u>**

1. P.கலைச்செல்வி
2. K.பழனிவேல் . . . மனுதாரர்கள்/9, 10 பிரதிவாதிகள்

/எதிராக/

1. செல்லம்மாள் (இறந்தவர்)
2. இளையப்பன்
3. செங்கோடன் . . . எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 17.07.2025–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர்கள்/9, 10 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.ரவிச்சந்திரன் அவர்களும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் திரு. R.ராம்சுந்தர் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவை வாதிகள் தரப்பிலுள்ள சாட்சி –1 ஐ Recall (மீண்டும் அழைத்து) செய்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

2. **<u>மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>**

மனுதாரர் மேற்படி வழக்கில் 9 வது பிரதிவாதி என்றும், 10 வது பிரதிவாதிக்கும் சேர்த்து இம்மனுவை தாக்கல் செய்வதாகவும், அசல் வழக்கு கடநத் 08.08.2019 ம் தேதியில் பதிலுரைக்காக வாய்தா போடப்பட்டதாகவும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தால் வழக்கானது மனுதாரர்களுக்கு எதிராக Exparte செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி விபரம் கடந்த 14.11.2024 அன்றுதான் மனுதாரர்கள்/9, 10 பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்றும், பின்னிட்டு மனுதாரர்கள்/9, 10 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய set aside மனுவை 25.11.2024 ம் தேதி தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணம் தாக்கல் செய்ய உள்ளதால், மேற்படி வழக்கை மனுதாரர்கள் தரப்பில் Reopen மனுவை 25.11.2024 ம் தேதி தாக்கல் செய்து இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுதாரர் தரப்பு சாட்சியம் அளிக்கும் முன்பு வாதி தரப்பிலுள்ள சாட்சி 1ஐ Recall செய்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டிய அவசியம் உள்ளதால் Pw1 சாட்சியத்தை மீண்டும் அழைக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார்கள். மேலும் இவ்வழக்கில் இறந்து போன கைளப்பகவுண்டரின் வாரிசான நடேசன் என்பவர் பிரதிவாதி சாட்சி 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், தற்பொழுது மனு தாக்கல் செய்துள்ள 9, 10 பிரதிவாதிகள் கைளப்பகவுண்டரின் வாரிசுகளில் ஒருவரான குப்புசாமி (4 ம் பிரதிவாதி) என்பவரது வாரிசுகள் தான் என்றும், ஏற்கனவே வாதி தரப்பு சாட்சி 1 ஆனவர் பிரதிவாதிகள் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்றும், வழக்கானது இரு தரப்பு வாதங்களை கேட்டும் இறுதிநிலையில் இருந்து வரும் நிலையில் தற்போது காலதாமதப்படுத்தும் நோக்கில்

தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் எதிருரையில் கூறப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

4. தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

5. மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

மனுதாரர்கள்/பிரதிவாதிகள் வாதிகள் தரப்பு 1வது சாட்சியை தங்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே அவரின் சாட்சியத்தை Recall செய்ய அனுமதி அளிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஏற்கனவே வாதி தரப்பு 1ம் சாட்சியை முழுமையாக குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நிலையில் இம்மனு அவசியமற்ற ஒன்று என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது இந்த வழக்கானது பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதத்திற்காக நிலுவையிலுள்ளது. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் இவ்வழக்கை விளம்புகை, சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ள நிலையில் இருதரப்பு சாட்சிகளை முழுமையாக விசாரித்த பிறகு தான் இவ்வழக்கில் தீர்வு காண இயலும் என்பதால் வாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்வது அவசியம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மனுதாரர்கள் /9, 10 பிரதிவாதிகளுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்றும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6. **<u>தீர்வு :</u>**

இறுதியாக இம்மனுவானது கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் எதிர்மனுதாரர்களுக்கு ரூ.1000/– செலவுத்தொகையாக 22.07.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும்,

தவறும் பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும், மேலும் PW1 ஆஜராகும் அன்று எதிர்மனுதாரர்கள் தரப்பில் அன்றே அவரை குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, ஜுலை திங்கள், 17–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.17 18:41:51 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

<u>மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2025.07.17 18:42:08 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**ஆத்தூர்.**

**<u>கூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 10/2025 இன்
அ.வ. எண்.200/2004
நாள் : 17.07.2025